28th July 1965]

கண்மாய்கள், மடைகள் எல்லாம் மராமத்துச் செய்யப்பட்டிருக்கின்றன. ஏதாவது அங்கத்தினர்கள் குறிப்பாக குறைகள் இருப்பதை எழுதி அனுப்பினால் அதுபற்றி அதிகாரிகளுக்கு உத்தரவு கொடுக்கலாம்.

திரு. சா. கணேசன் : நன்றி.

திரு. கரு. சீமைச்சாமி : சார், கனம் அமைச்சர் அவர்கள் கிழக்கு ராமநாதபுரத்தில் அதிகமான கண்மாய்கள் மராமத்து செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். ராமநாதபுரத்திலே மொத்த ஏரிகள் 6,346; அவற்றில் மராமத்து நடந்திருப்பது 855 ஏரிகளுக்கு, 2,843 ஏரிகளுக்கு நடந்து கொண்டிருக்கிறது. இன்னும் 3,500 சில்லரை ஏரிகள் மராமத்துச் செய்யப்படாமல் இருக்கின்றன. ஆகவே, இதில் விசேஷ கவனம் செலுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் கொடுத்த விவரத்திலிருந்து எவ்வளவு தூரம் ரிபேர் நடந்திருக்கிறது என்பது விளங்குகிறது. உணவு உற்பத்தித் திட்டத்தின்கீழ் மேலும் உதவிகள் செய்ய அரசாங்கம் முன்வந்து கொண்டே இருக்கிறது.

MR. SPEAKER : It is only a suggestion.

Family Card System

* 17 *Q.*—SRI C. CHIRANJEEVULU NAIDU : Will the Hon. the Minister for Food be pleased to state the Cities and Municipalities that are covered under the family card system for the distribution of rice and wheat?

THE HON. SRI V. RAMAIAH : A statement[a] is placed on the table of the House.

சபை முன் ஒரு விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

திரு. க. ர. நல்லசிவம் : சார், சமீபத்திலே பரவலாக எல்லா இடங்களிலும் குடும்பக் கார்டு கொடுக்கப் போவதாக ஒரு செய்தியை படித்தேன். இப்பொழுது இங்கே அறிக்கையில் முனிசிபல் நகரங்களுக்கு மட்டுந்தான் குடும்பக் கார்டு கொடுக்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மேஜர் பஞ்சாயத்துக்களிலும் இந்தக் குடும்பக் கார்டு முறையை அமுல் செய்ய சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : கேள்வியைப் பொறுத்து பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. அதற்குமேல் விவரங்களுக்கு தனிக் கேள்வி போடவேண்டும். அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், பெரிய நகரங்களோடு மற்ற இடங்களிலும் எங்கெங்கே அவசியமோ அங்கெல்லாம், மக்களுக்குத் தொந்தரவு இல்லாமல் செய்ய, மேஜர் பஞ்சாயத்து மட்டுமல்ல, சில கிராமங்களில்கூட, அங்கே உணவு நெருக்கடி இருந்தால், அங்கெல்லாம் குடும்பக் கார்டு கொடுப்பது

[a] Printed as Appendix I on pages 108-111.

[28th July 1965

என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. அந்த வகையிலே ஏராளமான இடங்களுக்கு குடும்பக் கார்டு கொடுக்கப்படும். அதே போல, சென்ற வருஷம் மழை இல்லாததால் பாதிக்கப்பட்டிருக்கிற திருநெல்வேலி ஜில்லாவில் ஏராளமான பகுதிகளுக்கு குடும்பக் கார்டுமூலம் உணவு தானியங்கள் விநியோகிக்கப்படும். இன்னும் எங்கெங்கே அவசியம் இருக்கிறதோ, அங்கெல்லாம் இந்த முறை கையாளப்படும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, குடும்பக் கார்டு முறையில், விநியோகிக்கப்படும் அரிசி, அதுவும் குறிப்பாக, சென்னை நகரத்திலே கொடுக்கப்படும் அரிசியை சில பெரிய ஹோட்டல்களிலே, உட்லண்ட்ஸ், ஹோட்டல் அசோகா, தாசப் பிரகாஷ் போன்ற ஹோட்டல்களிலே, சமைத்துப் போடுகிறார்கள், அது நாற்றம் அடிக்கிறது. ஏனென்று கேட்டால், அரசாங்கம் இப்படிப்பட்ட அரிசியைத்தான் கொடுக்கிறார்கள் என்று சொல்லு கிறார்கள். இதை நிவர்த்திக்க என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா: இந்த இரண்டு மூன்று மாதங் களில் இதுதான் முதல் தடவையாக இப்படிப்பட்ட புகார் என்னுடைய காதிற்கு வருகிறது. அங்கத்தினர் சொல்லுகிறார் கள் கனம் அங்கத்தினர் அவர்களுடைய மனதில்தான் நாற்றம் போல் இருக்கிறது. நல்ல அரிசி தான் கொடுக்கப்படுவதாக எனக்கு இருக்கக்கூடிய தகவல்.

திரு. சா. கணேசன்: தலைவர் அவர்களே, மழை பெய்யாத காரணத்தினால் திருநெல்வேலி பகுதிக்கு குடும்பக் கார்டு கொடுக் கப்படும் என்று அமைச்சர் குறிப்பிட்டார்கள், சாதாரணமாகப் பார்க்கும்போது, ராமநாதபுரம், திருநெல்வேலி, கோயம்புத்தூர் என்று மூன்று மாவட்டங்களுடைய பெயர்கள்தான் வந்திருக் கின்றன. அந்த இடங்களில் எல்லாம் இந்த குடும்பக் கார்டு கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுவிட்டதா? செய்யப்படவில்லை என்றால், விரைவில் ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா: உதாரணத்திற்கு திருநெல்வேலி ஜில்லா என்று சொன்னேன். அதே போல, ராமநாதபுரம், மற்ற ஜில்லாக்களுக்கும், தாராளமாகக் கிடைக்கும் சூழ்நிலை உண்டாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அவசியம் இல்லாத இடங்களில் அதிகாரிகளைப் போட்டு தொந்தரவு செய்வதில்லை. கிழக்கு ராமநாதபுரம் மட்டுமல்ல, மேற்கு ராமநாதபுரத்தில், மற்றும் அதிக விளைச்சல் இல்லாத பகுதிகளுக்கும்கூட அதிகமாக அரிசி கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

9-00 a.m. திரு. மூனா. ஆதி: தலைவர் அவர்களே, சென்னையைச் சுற்றியுள்ள 'பெல்ட் ஏரியா'க்களில் கூட குடும்பக் கார்டு முறையில் அரிசி கொடுக்கப்படுகிறது. அதேபோன்று, சர்க்கரை விநியோக முறையையும் சென்னை நகரில் உள்ளது போன்று இந்தப் பகுதி களுக்கு விஸ்தரிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

28th July 1965]

கனம் திரு. வெ. ராமையா : அதற்குத் தனியாகக் கேள்வி வேண்டும்.

திரு. கரு. சீமைச்சாமி : ரேஷன் முறையை அமுலுக்குக் கொண்டு வாராமல் குடும்பக் கார்டு முறையை அமுலுக்குக் கொண்டுவருவதன் நோக்கம் என்ன ?

கனம் திரு. வெ. ராமையா : கனம் அங்கத்தினருக்கு இந்த ஒரு வருஷத்திலே தெரிந்திருக்கும் என்று நினைத்தேன். தெரியா விட்டால் சொல்கிறேன். எங்கெங்கே உணவுப் பற்றுக் குறை இருக்கிறதோ, எங்கெங்கே உணவு தேவையாக இருக்கிறதோ, அங்கெல்லாம் உணவு தானியங்கள் கொடுப்பதற்காக, தேவைக்கு அதிகமாக இருக்கக்கூடிய பகுதிகளில் உள்ள மார்க்கட்டில் ஸர்ப்ளஸை அரசாங்கம் வாங்குகிறது. இதனல் விவசாயிகளுக்கும் தொந்தரவு கிடையாது. அதே நேரத்தில், தேவைப்படுகிற பகுதிக்குக் கொடுக்க முடியும். ஆனல், 'கட்டாயம்' என்று இருக்கும் பட்சத்தில், அதனல் விவசாயிகளுக்கு எவ்வளவு தொந்தரவு இருக்கும் என்பதை இந்தச் சபையில் இருக்கும் கனம் அங்கத்தினர்கள் உணர்ந்திருக்கிறார்கள். அதனல்தான், கட்டாய ரேஷன் முறையை வைத்து, எல்லா தானியங்களையும் வாங்கி விநியோகிக்கும் பொறுப்பை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : திருச்சி ஜில்லாவில் திருச்சிராப் பள்ளி, கரூர் ஆகிய இரு நகரங்கள் மட்டும்தான் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. புதுக்கோட்டை எப்போதும் பற்றுக் குறைப்பகுதியாக இருக்கிறது. புதுக்கோட்டைப் பகுதி எடுத்துக்கொள்ளப்படாததற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. வெ. ராமையா : புதுக்கோட்டைப் பகுதியில் உள்ள நிலவரத்தைப் பார்த்தேன். சட்டசபையிலே சொன்னல் கொஞ்சம் அதிக விளம்பரம் ஆகும் என்பதற்காகச் சொல்ல விரும்பா விட்டாலும், அங்கிருக்கும் உணவு நிலைமை திருப்திகரமாக இருக் கிறது என்றுதான் சொல்ல முடியும். மற்ற இடங்களுக்குக்கூட புதுக்கோட்டையிலிருந்துதான் அரிசி போகிறது. அதற்கு வேறு காரணங்கள் இருக்கின்றன.

திரு. எம். எஸ். செல்வராஜன் : குடும்பக் கார்டுகள் விநியோகம் செய்யப்படுகிற காலம் வரையிலும், ஏற்கனவே விநியோகிக்கப் பட்டிருக்கிற அடையாளக் கார்டு மூலமாகவே தற்போது கொடுக் கக்கூடிய அரிசியின் அளவை தற்காலிகமாக இரட்டிப்பாக்கிக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. வெ. ராமையா : கனம் அங்கத்தினர் திருநெல் வேலி ஜில்லாவை மட்டும்தான் குறிப்பிட்டுக் கேட்கிறார் என்று நினைக்கிறேன்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஆம்.

[28th July 1965

கனம் திரு. வெ. ராமைய்யா : திருநெல்வேலி ஜில்லாவைப் பொறுத்த மட்டில், மழை இல்லாததனால் ஏற்பட்ட நெருக்கடியை அரசாங்கம் உணர்ந்து அங்கு எவ்வளவு அரிசி தேவைப்படுகிறதோ அதைக் கொடுப்பது என்று முடிவு செய்திருக்கிறது. குடும்பக் கார்டு முறை இல்லாவிட்டாலும்கூட, இப்பொழுது இருக்கும் மக்களுடைய தேவைக்கு இன்னும் அதிகமாக அரிசி தேவைப் பட்டாலும் அரசாங்கம் கொடுக்கும்.

திரு. ஆ. கு. சுப்பையா : குடும்பக் கார்டு முறை தஞ்சை மாவட்டத்திற்கு இல்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்திலும் பெரிய நகரங்களில் நியாய விலையில் அரிசி வாங்குவதற்குக் கஷ்டங்கள் இருப்பதன் காரணமாக அந்த மாவட்டத்திற்கும் குடும்பக் கார்டு முறையை அமுலுக்குக் கொண்டுவருவார்களா?

கனம் திரு. வெ. ராமைய்யா : தஞ்சை மாவட்டத்தில் மட்டு மல்ல, வேறு எந்த மாவட்டத்தில் எந்த நகரத்தில் தேவைப் பட்டாலும், அரிசி கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்படும் பட்சத்தில், குடும்பக் கார்டு அல்லது தக்க முறைகளை ஏற்பாடு செய்து அரசாங்கம் கொடுக்கும்.

SRI C. CHIRANJEEVULU NAIDU: What is the total quantity required for meeting all the requirements under the Family Card system so far as rice is concerned?

THE HON. SRI V. RAMAIAH: A separate question may be put.

திரு. கே. ஏ. மதியழகன் : குடும்பக் கார்டு முறையில் சர்க்கரை விநியோகிப்பதற்கான விதி முறைகள் என்ன? சர்க்கரை சரி யாகக் கிடைக்கவில்லை என்கிற புகார் வந்திருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமைய்யா : அதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

திருமதி சாஜாத்தி குஞ்சிதபாதம் : தலைவர் அவர்களே, குடும்ப கார்டு வைத்திருக்கிறவர்களுக்கு மட்டும் பருப்பு கொடுக்கிறார்கள். சொந்த வயலிலிருந்து நெல் கிடைத்து உபயோகிப்பவர்களுக்குக் குடும்பக் கார்டு கொடுக்கப்படவில்லை. அம்மாதிரி நிலையில் அவர் களுக்கும் பருப்பு கிடைக்க சர்க்கார் ஏதாவது வழி செய்வார் களா?

கனம் திரு. வெ. ராமைய்யா : இதற்கும் தனியாகக் கேள்வி வேண்டும்.

திரு. தா. சின்னசாமி : சர்க்கரைக் கண்ட்ரோலினால், நியாய விலைக் கடைகளிலிருந்து சர்க்கரை ப்ளாக் மார்க்கெட்டுக்குப் போய், அதிக விலைக்கு விற்கப்படுகிறது. ஓட்டல்காரர்கள் அதிக விலை கொடுத்து வாங்கிவிடுகிறார்கள். அந்தப் பளு பொது மக்களைத்தான் சேர்கிறது. காபியின் விலை 15, 20 பைசா என்று ஏறிக்கொண்டு போகிறது. இதனால், ஓட்டல்காரர்களுக்கு ஒரு கஷ்டமும் கிடையாது. அதிக லாபம் அடைகிறார்கள். ஆகவே, சர்க்கரை கண்ட்ரோலை நீக்க அரசாங்கம் வழிவகை செய்யுமா?

28th July 1965]

கனம் திரு. வெ. ராமையா : சர்க்கரைக் கண்ட்ரோலை நீக்கினால் அரசாங்கத்திற்கும் வேலை சற்றுக் குறையும். ஆனால், பொது மக்களுக்கு இப்பொழுது கிடைக்கக்கூடிய சர்க்கரை கூடக் கிடைக்காமல் போய்விடும். சர்க்கரைக் கண்ட்ரோலை இன்னும் முறையாக அமுல் படுத்துவதன் மூலம் இப்பொழுது இருக்கக்கூடிய கஷ்டங்களையும்கூட நிவர்த்தி செய்ய முடியும். அந்த முறையில் அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது. சென்னை நகரத்தைத் தவிர, மற்ற இடங்களிலும் குடும்பக் கார்டு அடிப்படையிலேகூட சர்க்கரை விநியோகம் நடத்தத் தொடங்கியிருக்கிறது. இந்த முறை வெற்றிகரமாக இருக்குமானால், மற்ற மாவட்டங்களுக்கும், மற்ற நகரங்களுக்கும்கூட விஸ்தரிக்க முடியும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : அமைச்சர் அவர்கள் பதிலளிக்கின்றபோது, "விளையாத கிராமங்களிலும், வேண்டும் என்ற கிராமங்களிலும் குடும்பக் கார்டு கொடுக்கிறோம்" என்றார்கள். மரக்காணத்திலிருந்து கோட்டகுப்பம் வரையில் ஒரே மணற் பகுதியாக இருக்கிறது. அந்தப் பகுதியில் பெய்தாலும் விளையாது, காய்ந்தாலும் விளையாது. அம்மாதிரி கிராமங்களுக்கு நிரந்தரமாகக் குடும்பக் கார்டு கொடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமையா : எந்த ஜில்லாவாக இருந்தாலும் எந்தப் பகுதியாக இருந்தாலும், அங்கே விளைச்சல் இல்லாமல் மக்கள் கஷ்டப்படும் பட்சத்தில், அதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரவேண்டிய நிலைகூட இல்லை. ஸ்தலத்திலே இருக்கும் ரெவினியூ டிவிஷனல் ஆபீசர், கலெக்டர் இவர்களிடத்தில் சொல்லும்பட்சத்தில் அவர்கள் உடனே நடவடிக்கை எடுப்பார்கள். அதுவும் விசேஷமாக, கடலூர் பகுதியில் இருக்கும் மீனவர்களுக்கு அதிகக் கஷ்டம் இருக்கும் என்ற காரணத்தினால், அங்கு விசேஷமாகக் கவனம் செலுத்தப்படுகிறது. குடும்பக் கார்டு முறையிலோ, அல்லது அங்குள்ளவர்களே கூட்டுறவு சங்கம் அமைத்துக்கொண்டு தங்களுக்குள் அரிசியை விநியோகித்துக் கொள்ள முன்வருவார்களானால், அந்த முறையிலே அரிசி கொடுக்கவேண்டும் என்று ஜில்லாக் கலெக்டருக்குத் தெரிவித்திருக்கிறோம். இதில் ஏதாவது சிரமம் இருக்கும்பட்சத்தில் கனம் அங்கத்தினர் அவர்கள் ஜில்லாக் கலெக்டருக்குச் சொன்னால் போதும். அவர்கள் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுப்பார்கள்.

Fixation of prices for paddy

* 18 *Q.*—Sri S. J. RAMASWAMI : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there is any difference between the prices for paddy fixed by the Madras Government and the Central Government ; and

(*b*) whether the State Government has been consulted by the Central Government before fixing up prices?